களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

# நாலடியார் கூறும் வாழ்வியல் நெறிகளில் அறம்

**மு. கீதா**

உதவி பேராசிரியர்,( தமிழ்த்துறை ),
அன்னை மிரா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி,
அரப்பாக்கம். ( ராணிப்பேட்டை மாவட்டம் ) E-Mail: geethasai429@gmail.com

# Virtue is one of the principles of life that Naladiyar says

**M. Gita**

Assistant Professor, Department of Tamil

Annai Mira College of Engineering and Technology, Arabization. (Ranipet District) E-Mail: geethasai429@gmail.com

Abstract

The meaning of the word 'Aram' can be interpreted as 'to cut' or 'to make a way.' This etymology suggests a sense of action and transformation, resonating with the idea of breaking through obstacles or creating pathways that lead to new possibilities. The concept of 'cutting' can be seen as a metaphor for addressing challenges or difficulties in life, while 'making a way' implies the act of forging ahead, finding solutions, and enabling progress. In the broader context of human society, morality plays a pivotal role in ensuring the welfare and advancement of mankind. This collective understanding of what is deemed right or wrong, commendable or blameworthy, is often encapsulated in the term 'Virtue.' Virtue embodies a set of principles and standards that guide individuals in their interactions with one another and with the world around them. It encompasses qualities such as honesty, kindness, integrity, and compassion, which are essential for fostering harmonious relationships and a thriving community. The purpose of the science that focuses on these themes is to delve deeper into the messages and teachings surrounding this concept of virtue. This exploration seeks to uncover the underlying truths and values that promote ethical behavior and highlight the significance of virtuous living. By studying virtue and its implications, individuals can gain insight into how to lead lives that contribute positively to society, ultimately enhancing both personal fulfilment and communal well-being.

**Keywords;** Aram, Naladiyar,

**கட்டுரைச் சுருக்கம்**

அறம் என்னும் சொல்லிற்கு 'அறுத்துச் செல்வது ', 'வழியை உண்டாக்குவது என்று பொருள் கூறுவர். மனிதஇனத்தின் நலத்திற்க்காகவும் முன்னேற்றத்திற்காகவும் மனித சமுதாயம் வரையறுத்துக் கொண்ட ஒழுக்கநெறி 'அறம் ' எனப்படும்.இவ்வறத்தை பற்றி செய்திகளைச் உயத்துணர்வதே இவ்வியலின் நோக்கமாகும்..

**கருச்சொற்கள்**: அறம், நாலடியார், வாழ்வியல் நெறி

**அறம் என்பதன் பொருள் :**

'அறம்' என்பதை வாழ்க்கை நெறி என்றும் கூறலாம். அதாவது மனித வாழ்க்கையைச் செம்மையுடையதாகவும் அமைதியுடையதாகவும், பயனுடையதாகவும் அமைவதற்கு ஆன்றோர்கள் காட்டிய அன்றாட வாழ்க்கையில் பின்பற்றவேண்டிய முறைகளே அறம் ஆகும்.

தனிமனிதனின் உணர்ச்சியை வெளிப்படுத்தும் ஆற்றல் அன்புக்கும் கோபத்திற்கும் உண்டு. இவ்உணர்ச்சி வெளிப்பாடுகளில் காண்பவர்களும் கேட்பவர்களும் மகிழும்வண்ணம் செய்தலே தமிழ்ச் சான்றோர்களின் தலையாய பணியாகும். அன்பைச் பரிமாறி மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கும் கோபத்தைப் போக்குவதற்கும் அனுபவ அறிவில் கூறிய பாடல்கள் அறம் கூறும் நோக்கில் பாடப்பட்டவை ஆகும்.

கூடி வாழும் விலங்கான மனிதன் பிறரோடு தொடர்பு கொள்ளும்பொழுது உண்டாகும் கோபத்தைத் தவிர்ப்பதற்கும், வேகத்தை நிறுத்துவதற்கும், ஆன்றோரால் வகுக்கப்பட்ட வாழ்க்கைநெறி அறம் என்பது ஆகும்.

பெருமைமிக்க பிறவியே மானிடப்பிறவி ஆகும். இவ்வறிய பிறவியின் பயன் நல்லறம் செய்து வாழ்வதாகும். மனித உடல் ஒருநாள் வழுவிழுந்து சாறு பீழி பிழிந்தெடுத்த கரும்புச் சக்கை போலாகிவிடும். எனவே அறம் செய்து வாழ வேண்டும் என்று நாலடியார்,

" கரும் பூர்ந்த சாறுபோல் "(நாலடி, 34)

என்னும் உவமை வழியில் கூறுகிறது. மனித வளர்ச்சியில் அறவுணர்வு முதலில்

தோன்றியதாகும்.இதனையடுத்துத் தோன்றிய அறவுணர்வை " வழக்காற்றி ஒழுக்கநெறி " என்பர். இது மேல்தட்டில் வாழுகின்ற மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு போற்றப்பட்டது. இதனைத் தொல்காப்பியர்,

" வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே

நிகழ்ச்சி அவர்கட்கு ஆக லான்."(தொல், நூற்பா :94)

என்னும் நூற்பா மூலம் குறிப்பிடுகிறார். அறநெறி என்றும் மாறாதது. ஆனால் இந்த வழக்காற்று ஒழுக்கநெறி காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மாறிக் கொண்டே போகும்.

உயர்ந்ததும் சிறந்ததுமான அறஉணர்வு, மனதின் தூய்மையை அடிப்படையாகக் கொண்டது. திருவள்ளுவர் இந்த உயர்நிலையான அறத்தையே,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் "(குறள், 34)

என்னும் திருக்குறள் மூலம் கூறியுள்ளார். சீத்தலைச் சாத்தனார் தன் காப்பியமான மணிமேகலையில் ' அறம் ' என்பதற்கு ஒரு விளக்கமே கொடுத்து உள்ளார்.

" அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்

மறவாது இதுகேள் மண்ணுயிர்க் கெல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது இல் "

(மணி மேகலை, அம்பலம் புக்க காதை 24-26)

வாழ்வைச் செம்மையாக வகுத்துக் கொண்டு வளமுடன் வாழ வேண்டும் என்பதே புலவர் பெருமக்களின் கனவாய் இருந்ததை அவர்கள் இயற்றிய பாடல்கள் வழி அறிய முடிகிறது.

இவ்வுலக வாழ்வு நிலையில்லாதது. எத்தனை நாள் என்று தெரியாத வாழ்வு மனித வாழ்வு ஆகும். இத்தகைய நிலையில்லாத வாழ்வில் இருக்கும்வரை மற்றவர்களுக்கு உதவி செய்து வாழ வேண்டும். சிறுகச் சிறுகச் சேர்த்ததைச் தானே அனுபவிக்க வேண்டும் என்னும் தன்னலம் இருக்க கூடாது.'சிறுதுளி

பெருவெள்ளம் ' என்னும் பழமொழிக்கேற்பச் சேர்த்த பொருளை மற்றவருடன் பகிர்ந்துண்டு வாழ்ந்து இன்பம் பெற முயலுதல் வேண்டும்.செல்வம் என்றைக்கு வைத்துருப்போரிடமிருந்து போகும் என்று சொல்ல முடியாது. உலக வாழ்வு கடிகாரம் போன்று சுழன்றுகொண்டே இருக்கும்.

எனவே உலகச் சுழற்சியில் தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுத்து உதவாமல் வாழ்வதால் யாருக்கும் எந்த லாபமும் இல்லை. இக்கருத்தை நாலடியார் பாடல் மூலம் உணரலாம்.

"துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டு

பகடு நடந்த கூழ் பல்லரோ டுண்க

அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்

சகடக்கால் போல வரும்."(நாலடி. 1)

மனித வாழ்வு பற்றிய சிந்தனையில் பிறப்பும் இறப்பும் நமக்கு உறுதியாக தெரியாமல் இருக்கும் பட்சத்தில் நம் வாழ்வை வாழ்வதற்காகவே பயன்படுத்த வேண்டும்.

தன்னை எதிர்த்துதோரை வியக்கவும், இழிவாகவும் நினைக்காமல் பகைவரை வென்றப்போது மகிழ்ந்தும், இழிவாக நினைக்காமல் சாதாரணமாகவே நினைக்கும் மன்னர்கள் வாழ்ந்த பூமியில் பிறந்த நாமும் இந்நெறியைப் பின்பற்றி வாழ்ந்தால் உயர்வை அடையலாம். இக்கருத்தை,

" உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை

வியந்தன்று மிழிந்தன்று மிலனே அவரை

அழுந்தப் பற்றி யகல்வீசும் பார்பெழப்

கவிழ்ந்து நிலஞ்சேர வட்டதை

மகிழ்ந்தன்று மலிந்தன்று மதனினும் இலனே "(புறம் 77)

என்னும் புறநானூற்றுப் பாடலால் அறிய முடிகிறது. திருவள்ளுவரின்

எழுத்தோவியமான திருக்குறளிலும் இக்கருத்தைக் காண முடிகிறது.

மரங்களும், செடிகளும், கொடிகளும், அழகாய்ப் பூத்துக் குலுங்கும் சோலையில் பழங்கள் பழுத்தும், இலையுதிர் காலத்தில் மரங்கள் வெறுமையாய் நிற்பதும் அனைவராலும் கண்கூடாகக் காணும் நிகழ்ச்சியாகும். இளமையும் அழகும் வயதனால் சென்று விடும். " என்ன அழகு எத்தனை அழகு, கொள்ளை இன்பம் கொட்டிய அழகு " என்று பாடி இளைஞன் விருப்படும் பெண்ணும் ஒருநாள் கோலூன்றி கூன் போட்டு நடக்கும் காலம் நிச்சயம் வரும். எனவே வாழ்க்கை நிலையில்லாதது, இளமையும் நிலையில்லாதது என்பதை உணர்ந்து வாழ வேண்டும்.

" பனிபடு சோலைப் பயன்மர மெல்லாம்

கனியுதிர்த்து வீழ்ந்தற் றிளமை - நனிபெரிதும்

வேற்கண்ணன் என்றிவனை வெ஀கன்மின் மற்றிவரும்

கோற்கண்ணா ளாகுங் குனிந்து."(நாலடி. 17)

என்ற பாடல் மூலம் நாலடியார் இளமை நிலையில்லாதது என்பதை எடுத்துக்காட்டுடன் கூறி உள்ளதை சிந்திக்க வேண்டும்.

திருத்தக்கத் தேவர் இயற்றிய சீவக சிந்தாமணியில் இதே கருத்தை எடுத்தாண்டுள்ளதை ஒப்பு நோக்கத்தக்கது.

" காய் முதிர்கனியி னூழ்த்து விழுமிவ் யாக்கை "

( சீவக சிந்தாமணி, கேமசரியார் இலம்பகம், 1435)

மனிதன் பிறக்கும்போது அழுது கொண்டே பிறக்கிறான், இறக்கும் போதுபிறரை அழ வைக்கிறான், பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட நாளில் 'நல்லவன் ' என்று பெயரெடுத்தலே ஒருவன் செய்ய வேண்டிய கடமை ஆகும்.'நல்லவன் ' என்ற அமுதமொழி எவருக்கும் எளிதில் கிடைத்து விடாது. பட்டங்கள் கூடப் படித்து எழுதிப் பெற்று விடலாம், நல்லவன் என்ற பட்டம் பெற " கொடுத்துதவும் நல்ல பண்பு ' என்ற பாடத்தை நன்கு படிக்க வேண்டும்.

திருமண வீட்டிற்கு அழைத்தால் மட்டுமே விருந்தினர் வருவர். ஆனால் '

இழவு ' வீட்டிற்கு அழைக்காமலே வந்து விடுவர். போகும்போது சொல்லாமலே சென்று விடுவர்.மக்களின் வாழ்வு நிலையில்லாதது. மரம் தனக்குச் சொந்தம் என்று நினைக்கும் பறவை, கூடுகட்டி வாழ்ந்த போதும், வெகுதூரம் பறந்து சென்று விடும். நம் உயிரும் உடலை விட்டுப் பிரிந்து போய்விடும் என்ற இயல்பான கருத்தை,

" கேளாதே வந்து கிளைகளாய் இல்தோன்றி

வாளாதே போவரால் மாந்தர்கள் - வாளாதே

சேக்கை மரன்ஒழியச் சேண்நீங்கு புள் போல

யாக்கை தமர்க்கொழிய நீத்து " (நாலடி, 30)

என்ற பாடல்மூலம் நயமாய் நாலடியார் கூறுகிறது. மேலும் அகத்தைப் பற்றிக் அகநானூறிலும் இக்கருத்து உள்ளது.

" அலங்க லஞ்சியைக் குடம்பைப் புள்லெனப்

புலம்பெயர் மருங்கிற் புள்ளேழுந் தாங்கு

மெய்யிவள் ஒழிய போகி யவர்

செய்வினை மருங்கிற் செலீஇயர்கின் உயிரே "(அகம். 113)

எனவே நிலையில்லாத வாழ்க்கையில் செல்வமோ, உயிரோ, உடலோ நிலைப்பதில்லை. நாம் செய்யும் செயலில் பெரும் நற்பேறும் உதவும் குணமும் அன்பும், பற்றற்ற பண்பும் மட்டும் நிலையானது என்று நாலடியார் கூறுகிறது.

உயிர்களுக்கு இனிமையானவற்றைச் செய்தலும் நல்ல வழியில் சென்று உண்மையாய் நிற்பதும் தானம், தர்மம் செய்து உயர்தலும் அறம் எனப்படும்..

" அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயன் "(நன்னூல், நூ. 10)
என்ற இலக்கண நூலான நன்னூல் வீடு பேற்றிற்கு இலக்கணம் வகுத்தது. இவ்வாறு தமிழ் இலக்கியங்களுக்கு உரியதாய் வலியுறுத்தப்பட்டுள்ள நான்கு பொருள்களுள் அறம் முதன்மையானதாக உள்ளது.

அறிவற்றவர்கள் துன்பம் வந்து வாட்டும்பொழுது திணறுவார்கள். இத்துன்பத்திற்கு காரணம் நாம் முன் செய்த வினையின் பயன் என்பதை உணரமாட்டார்கள். ஆனால் அறிவு பெற்ற பெரியோர்களோ நாம் பெறும் துன்பத்திற்கு காரணம் முன் செய்த வினையே என்பதை உணர்ந்து தீய செயல்களை விட்டு விட்டு நல்ல செயலைச் செய்ய முயல்வார்கள். இக்கருத்தை,

"வினைப்பயன் வந்தக்கால் வெய்ய உயிரா

மனத்தின் அழியுமாம் பேதை - நினைத்ததனைத்

தொல்லைய தென்றுவார் வாரே தடுமாற்றத்

தெல்லை இகத்தொருவு வார்." (நாலடி, 33)

என்ற பாடல் மூலம் நாலடியார் கூறுகிறது. இக்கருத்தை இளங்கோவடிகள் தன் காப்பியான சிலப்பதிகாரத்தில்,

" அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதும்"(சிலப்பதிகாரம், பதிகம் )

" ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்"(மேலது, பதிகம் )

என்ற வரிகள் மூலம் தெளிவாய்க் கூறியுள்ளார். அறக்கருத்துகளை வலியுறுத்தி எழுந்த நூல்கள் மக்களின் சிந்தையுள் செலுத்த முயற்சித்தும் அவ்வளவாய் பயன்பெறவில்லை என்பதை மறுக்க முடியாது.

பொருத்தல்

துன்பப்படுவோரைக் கண்டு வருந்துதல் வேண்டும். மற்றவர் துன்பத்தைத் தன் துன்பம்போல் நினைத்ததால் தான் 'போதி மரம் ' தோன்றியது. மகாவீரர், புத்தர் போன்றவர்களின் சிந்தனையில் தோன்றிய எண்ணங்கள் போதனைகளாக வந்தன. தன்னை இகழ்ந்து பேசியவர்களை இயேசுவைப் போல் மன்னிக்க வேண்டும்.இகழ்ந்து பேசுவோர் அடுத்த பிறவியில் பெறும் துன்பத்தை நினைத்து வருத்தப்படுவது பெரியோர்களின் செயலாகும்.

" இகழ்வார்ப் பொருத்தல்namm(குறள். 151)

என்னும் குறளுக்கேற்ப பொறுமையைத் தவறாமல் கடைப்பிடித்து வாழ்வது பெரியோர்களின் கடமையாகும். தம்மை இகழ்ந்ததற்காகத் தீவினை மறுமையில்

பெறக்கூடுமே என்று வருத்தப்படுவது பெரியோர்களின் இயல்பு ஆகும் என்பதை நாலடியார் நயமாய் எடுத்துச் சொல்கிறது.

" தம்மை யிகழ்தமை தாம்பொறுப்ப தன்றிமற்

றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால் உம்மை

எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று

பரிவதூஉம் சான்றோர் கடன் "(நாலடி. 58)

என்ற பாடல் மூலம் நாலடியார் பெரியோர்களின் குணத்தை விளக்கிக் கூறியுள்ளது.

திருவள்ளுவர்,

"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்

இன்னாச்சொல் நோற்பாரின் பின் "(குறள். 160)

என்ற குறள் வழி பெரியவர் பண்பு பற்றிக் கூறியுள்ளார்.

சினமின்மை

கோபத்தை யாரிடமும் காட்டாது அடக்கி வாழ்தல் வேண்டும். மிக்க சினத்துடன் இருக்கும் நாய் ஒன்று தம்மைக் கடித்துவிட்டது என்பதற்காக யாரும் நாயை திருப்பிக் கடிக்க மாட்டார்கள். இவ்வுலகத்தில் இப்படிவொரு வழக்கு இதுவரை வந்ததில்லை. இதை நாலடியார் கீழ்மக்கள் தகுதி பார்க்காது இழிசொல் பேசினாலும் அறிவுடைய சான்றோர் பதிலுக்குத் திருப்பி பேசாமல் அமைதி காப்பர் என்று எடுத்து மொழிகிறது.

" கடர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயாற்

பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை நீர்த்தன்றிக்

கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ

மேன்மக்கள் தம்வாயால் மீட்டு "(நாலடி. 70)

என்ற பாடல் மூலம் மேன்மக்களின் பண்பைக் கீழ் மக்களோடு பொருந்தி நாலடியார் எடுத்துச் சொல்கிறது.மேலும்

"நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்

வேர்த்து வெகுளார் விழுமியோர் "(நாலடி. 64)

என்றும்

" நல்லெறிந் தன்ன கயவர்வாய் இன்னாச்சொல்

எல்லாருங் காணப் பொறுத்துயிப்பர் "(நாலடி. 66)

என்றும்

" நேரல்லார் நீரல்ல சொல்லியக்கான் மற்றது

தாரித் திருத்தல் தகுதி "(நாலடி. 72)

என்று கூறியுள்ளது. எதனையும் அறிந்து நல்லபடி நடந்தால் நன்மையை அடையலாம்.

மறுபிறவியின் பயன்

இல்லையென்று வருபவர்க்கு வாய் கூசாது இல்லையென மறுக்கும் உலோபிகள் அதிகம் உண்டு. பிடி அரிசியாவது தன்னை விட எளியவர்களுக்கு கொடுத்து உதவி உண்ண வேண்டும். இல்லையென்று வருபவர்களின் நிலைமை, குடும்பச் சூழ்நிலை என்று நினைக்க வேண்டும். முன் பிறவியில் யாருக்கும் கொடுத்து உதவி செய்து வாழாத மக்களை இப்பிறவியில் உம்உணவின்றிப் பிச்சை எடுத்து

அல்லாடுப்பவர்கள் என்று நாலடியார் கூறுகிறது.

"இம்மி யரிசித் துணையானும் வைகலும்

நும்மில் இயைவ கொடுத்தன்பின் - உம்மைக்

கொடாஅ தவறென்பர் குண்டுநீர் வையத்(து)

அடாஅ அடுப்பி னவர். "          (நாலடி. 94)

என்ற பாடல் மூலம் முடிந்தவரை உதவி செய்து வாழுங்கள் என்பதை நாலடியார தெளிவாய்க் கூறுகிறது. இக்கருத்திற்குப் பலம் சேர்க்கும் நோக்கில்,

" மாசித்திங்கண் மாசின சின்னத் துணிமுள்ளின்

ஊசித்துன்ன முசிய - வாடை யுடையாகப்

பேசிப்பாவாய் பிச்சை யெனக்கை யக லேந்திக்

கூசிக்கூசி நிற்பர் கொடுத்துண் டறியாதார். "(சீவகசிந்தாமணி,2929)

என்று பாடல் மூலம் திருத்தக்கத் தேவரும் கூறியுள்ளார். மேலும் இனியவை நாற்பது என்ற நீதி நூலில்,

" எத்திறத் தானும் இயைவ கர்வதா

பற்றினிற் பாங்கினிய தில் ". (இனியவை நாற்பது, 27)

என்று கூறப்பட்டுள்ளதை அறிந்து நல்வழி நடத்தல் வேண்டும். " வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான் " என்பதே சிறந்த எடுத்துக்காட்டுப் பழமொழி ஆகும். இந்தப் பிறவியில் புகழும் மறுபிறவியில் நற்பயனும் பெறவே அனைவரும் முயல வேண்டும். முடிந்தவரை இல்லை என்று அல்லாடுபவர்களுக்கு கொடுத்துதவி செய்து வாழ வேண்டும். மற்றவருக்குத் கொடுத்துதவ முடியாமல் தன்னையே வறுமை சூழ்ந்துக் கொண்டால், பிறரிடம் சென்று பிச்சை எடுக்காமல் இருக்க வேண்டும். தானம் தருவதை விடப் பிச்சை எடுக்காமல் இருப்பது பல மடங்கு சிறப்புத்தரும் செயலாகும்.

" கரவாத திண்ணன் கண்ணன்னார் கண்ணும்

இரவாது வாழ்வதாம் வாழ்க்கை - இரவினை

உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ

கொள்ளுங்கால் கொள்வர் குறிப்பு. "(நாலடி, 305)

என்னும் பாடல் இத்தனையே எடுத்துக் கூறுகிறது.

“ கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்

இரவாமை கோடி உறும் “. (குறள். 1061)

என்ற குறட்பாவின் மூலம் இரத்தலின் இழிவான நிலையை விளக்கியுள்ளார். மக்களுக்கு இம்மை மறுமைப் பயன்களை எடுத்துச் சொல்லும் புறநானூறு,

நல்லது செய்தல் ஆற்றி ராயினும்

அல்லது செய்தல் ஓம்புமின். “(புறம். 195)

என்று வலியுறுத்தி உள்ளது. நீதி கருத்துக்களைச் சொல்லி மக்களை நல்வழிப்படுத்தி

மக்களை மக்களாய் வாழச் சொல்லி வற்புறுத்துகிறார், திருவள்ளுவர்

“ ஏதம் பெருஞ்செல்வம் தான்றுவ்வான் தக்கார்க்கொன்று

ஈதல் இயல்பிலா தான். “ (குறள். 1006)

என்றும் கூறப்படுகிறது. ஒரு வரியில் கருத்துக் கூறி படிப்போரை எளிதில் கவரும் ஆத்திசூடியில்,

“ இயல்வது கரவல் “ (ஆத்திசூடி, 3)

என்று ஔவையார் கூறியுள்ளார். புறப்பாடல்கள் பெரும்பாலும் அறத்தையே வலியுறுத்தி இயற்றப்பட்டுள்ளவை என்பது நோக்கத்தக்கது. ஆகும்.

மானம்

ஒவ்வொருவருக்கும் உயிரை விட பெரியது மானம் ஆகும். உடலுக்கு அணிகலன் ஆடை, ஆபரணம் என்றால் உயிருக்கு அணிகலன் மானம் ஆகும். இந்த உடம்பு என்றும் அழியாமல் நிலைத்திருக்கும் என்றால் உயர்ந்த மானத்தை ஓரம் தள்ளிவிட்டுப் பிச்சை எடுத்துக் கூடக் காப்பாறலாம். ஆனால் அழியக் கூடிய உடம்பிற்கு ஏன் கவலைப்பட வேண்டும். இதைவிட அழியாத புகழைச் செய்து

நல்லறம் பெற்று இன்பமாய் வாழ வேண்டும். மனிதர்கள் நினைத்தால் நாடே நலமாய் இருக்கும் என்று நாலடியார்

பின்வரும் பாடல் வழி எடுத்துச் சொல்கிறது.

" மான அருங்கலம் நீக்கி இரவென்னும்

ஈன இளிவினால் வாழ்வேன்மன் - ஈனத்தால்

ஊட்டியக் கண்ணும் உறுதிசேர்ந் திவ்வுடம்பு

நீட்டித்து நிற்கும் எனின். " (நாலடி. 40)

' அழியாத புகழைப் பெற முயல்வதை விட்டுவிட்டு அழியும் உடபிற்கு ஏன் வருந்துகிறீர்கள் ' என்று நாலடியார் புத்திமதி சொல்கிறது. தன் உடம்பிலிருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரிமானை மானத்திற்கு ஒப்பாகக் கூறுகிறார்

திருவள்ளுவர்,

" மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்

உயிர்நீப்பர் மானம் வரின். " (குறள். 969)

வள்ளுவர் மானத்தின் உயர்நிலையைக் குறள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் புறப்பாட்டு,

" குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்

ஆளன் றென்று வாளிற் றப்பார்

தொடர்ப்படு ஞமலியி னிடறப்படுத் திரீ இய

கேனல் கேளீர் வேளாண் சிறுபத

மதுகை யின்றி வயிற்றித் தீத் தணியத்

தாமிரநீ ரோவிங் உலகத் தானே " ( புறம். 74)

என்று கூறுகிறது. வில்லிபுத்துரார் தன் படைப்பில்

“ ஊனமே யான ஊனிடை யிருக்கும்

உயிரினைத் துறந்தும்ஒண் பூணாம்

மானமே புரப்ப தலுனிமேல் எவர்க்கும்

வரிசையும் தோற்றமும் மரபும்

ஞானமே யான திருவடி யுடையாய்

ஞாலமுள் ளளவும்நீற் றலினால்

ஈனமே உயிருக் கியற்கைஆ தலினால்

என்றனன் வீமனுக் கிளை யோன். “ (வில்லிபாரதம், 43)

என்று கூறிஇருப்பதைச் சிந்தித்து பார்க்க வேண்டும். இனியதை மட்டும் கூறும் நூலில்

“ மானாமழிந்தபின் வாழமை முன்னிதே “(இனியவை நாற்பது,14)

என்று வரும் வரிகள் நோக்கத்தக்கவை. இவற்றை உணர்ந்து நடந்தால் வாழ்வில் உயரலாம்.

முடிவுரை :

நாலடியார் வாழ்வியல் நெறிகளில் அறத்தை வலியுறுத்திய பாங்கு பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இளமை, யாக்கை, செல்வம் போன்றவை நிலையில்லாதவை. அறம் செய்வதால் பெறும் பலன் அறியப்பட்டது. பெரியோர்களும், சிறியோர்களும் நன்மை, தீமை செய்யும் குணத்தில் இருந்து மாற மாட்டார்கள். மானம் உயிரைவிடப் பெரியது என்றும் காணப்பட்டது. மானத்திற்கு உவமை கூறிய சிறப்பு காணப்பட்டது. ஆழம் காண முடியாத மனித மனத்தின் சிறப்பு பற்றியும் காணப்பட்டது. வாழ்வியல் நெறிகளில் அறத்தின் சிறப்பு இவ்வியலில் ஆராயப்பட்டது.

**Reference;**

பார்வை நூல்கள் :

1. நாலடியார் உரைவளம், ஸ்ரீ. எஸ். முத்துரத்ன முதலியார், (பா. ஆ ), தஞ்சை சரஸ்வதி மகால் நிறுவாகக் குழு, தஞ்சாவூர். இ. ப. 1980.

2. நாலடியார், (தெளிவுரை - பொழிப்புரை - அரும்பதவுரை ), உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை - 1, இ. ப. 2003 ஜனவரி.
3. தொல்காப்பியம், மூலமும் உரையும், ஞ. மாணிக்கவாசகன், (உ. ஆ ), உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை - 1, மு. ப. 2000 மார்ச்.
4. திருக்குறள் தெளிவுரை, மு. வரதராசனார், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், திருநெல்வேலி, சென்னை - 18, 143 வது பதிப்பு 2003, செப்.
5. மணிமேகலை, ( பாட்டும் உரையும் ) ம. மார்க்கம் பந்து, ( உ. ஆ ), புவனா பதிப்பகம், காட்பாடி, வேலூர் - 6, மு. ப. 2002.
6. புறநானூறு மூலமும் உரையும், வ. குருநாதன் ( ப., ஆ ), வடிவேல் பதிப்பகம், இராசீவ் நகர், தஞ்சாவூர் - 4, மு. ப. 2003,,டிசம்பர்.
7. சீவக சிந்தாமணி, பேரா. ஜெ. ஸ்ரீ. சந்திரன் (உ. ஆ ), தமிழ் நிலையம், தியாகராஜ நகர், சென்னை - 17, இ. ப 2004 ஜூலை.
8. அகநானூறு, முனைவர். தமிழண்ணல், ( உ. ஆ ), கோவிலூர் மடாலயம், கோவிலூர் -7
9. சிலப்பதிகாரம், மாணிக்கவாசகன், ( உ. ஆ ), உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை - 1, நா. ப. 2005.
10. நீதி நூல்கள் விளக்கவுரை, வாண்டு மாமா( ப. ஆ ), வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை - 17, மு. ப. 2005.

All research papers published on this website are licensed under Creative Commons Attribution 4.0 International License, and all rights belong to their respective authors/researchers.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.